**நாகொட பிரதேச சபை - 2023**
---------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாகொட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நாகொட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 662,000 தொகை பெறுமதியான ஹாடிமெக் பாரந்தூக்கி, மோட்டார் வாகனம் மற்றும் வண்டிகள் கணக்கில் கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிலையான வைப்புக்களுக்காக பெற வேண்டிய வட்டி மற்றும் கிடைத்த வட்டி ரூபா 196,170 தொகை பொறுப்பு மீதியொன்றென காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | உடுகம உப அலுவலத்தின் திருத்த வேலை செலவு பில் பத்திரம் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போது சபைக்கு சமர்ப்பிக்கப்படாமை மற்றும் பிரதேச சபை பொது நூலக திருத்த வேலைக்காக செலுத்த வேண்டிய மீதி மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் முறையே ரூபா 849,065 தொகையினால் மற்றும் ரூபா 202,970 தொகையினால் செலுத்த வேண்டிய அரசாங்க உதவிக் கணக்கு அதிகரித்திருந்தது. | | |
| (ஈ) | ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 10,111,667 இற்கான மூலதனச் செலவுகள் நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | வீதி விளக்குகள் பராமரிப்பு தொடர்பாக 2019 ஆண்டிற்குரிய சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 102,384 இற்கான தொகையொன்று 2020 ஆண்டின் போது கிடைத்திருந்த போதிலும் அந்த மீதி 2023 ஆண்டின் போதும் கடன்பட்டோர் என காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 10 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 3,940,500 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | வித்தியாசங்களை இணங்கஞ் செய்து சரிசெய்ய வேண்டும். |

### 1.6.3 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 18,315 இற்கான தொங்கல் கணக்கின் செலவு மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்படாமல் காணப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தொடர்ச்சியாக காணப்படும் தொங்கல் கணக்கு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 116,238,133 தொகைக்கான 06 கணக்கு விடயங்கள் தொடர்பான விரிவான அட்டவணை சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமான பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 104 | சபைக்குச் சொந்தமான டிரக்டர் ஒன்றின் பின்பகுதி கண்ணாடி மற்றும் சாரதி ஆசனத்தின் வலது பக்க கண்ணாடி உடைந்திருந்ததுடன் இது தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நி.பி. 104 இன் படி விசாரணை அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என. | பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | தென் மாகாண பிரதான செயலாளரின் 2108 மே 22 திகதிய SS/03/12/05 இலக்கங் கொண்ட சுற்றறிக்கை | 05 வருடங்களுக்கும் 02 இற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் செயற்படாத நிலைமையில் காணப்பட்ட ரூபா 4,211,120 தொகை கிரயத்தையுடைய ஹாடிமெக் இயந்திரம் மற்றும் 02 டிரக்டர்கள் திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கூறுவிலைகள் அழைக்கப்பட்டு தொடர் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என. | வாகனங்களை திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயலாளரினால் தொகுதி போக்குவரத்து வசதிகளின்றி ஒரு நாளைக்கு வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் இடையே பிரயாணம் செய்வதற்காக சபையின் வாகனத்தை பயன்படுத்தி இருந்ததுடன் அதன் எரிபொருளுக்காக ரூபா 277,229 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | போக்குவரத்து வசதிகள் பெற்றுக் கொள்வதற்காக ஆளுனரின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 1,103,608 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்ரொப்ப முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 3,220,655 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,315,000 | 561,850 | 582,269 | 379,222 | 865,000 | 1,063,469 | 1,186,032 | 399,641 |
| வாடகை | 3,379,200 | 2,967,456 | 2,859,710 | 725,387 | 4,476,000 | 1,813,560 | 6,633,804 | 617,641 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,100,500 | 1,086,328 | 982,805 | 103,523 | 551,000 | 965,740 | 1,696,452 | - |
| ஏனைய வருமானங்கள் | 1,705,000 | 830,496 | 830,496 | 14,801,129 | 1,710,000 | 780,242 | 1,191,152 | 14,801,129 |
| | 7,499,700 | 5,446,130 | 5,255,280 | 16,009,261 | 7,602,000 | 4,623,011 | 10,707,440 | 15,818,411 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை மொத்த வருமானம் ரூபா 15,818,411 தொகையாக காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு மீதி ரூபா 16,009,261 தொகையாக காணப்பட்டமையால் வருமானம் சேகரித்தல் 24 சதவீதமாகக் காணப்பட்டது. | இந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 17,971 சதுர ஹெக்டயர்களைக் கொண்ட 53 கிராம சேவகர் பிரிவுகள் | 06 கிராம சேவை பிரிவுகள் இனங்கண்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது என. | வீதவரி விதிக்க வேண்டிய பிரதேசங்களை |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 134(1) மற்றும் (2) இற்கு இணங்க அதன் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி அறவீடு செய்து சபையின் வருமானத்தை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நிலுவை கடை வாடகை மீதியில் காணப்படும் ரூபா 358,784 இற்கான மீதிகள் 02 வருடங்களுக்கும் 03 இற்கும் இடைப்பட்ட காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்டது. | இது தொடர்பாக தீர்வொன்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அறவிடப்படாமல் காணப்படும் மீதிகளை விரைவாக அறவிட வேண்டும். |
| (ஈ) | சபைக்கு சொந்தமான நீர் பவுசரின் மூலம் நீர் வினியோகிப்பதற்காக 84 நாட்கள் பயன்படுத்தப்பட்டு இருந்த போதிலும் 7 நாட்களுக்காக மாத்திரம் வருமானம் அறவிடப்பட்டிருந்தமையால் சபைக்கு ரூபா 770,000 இற்கான வருமானம் ஒன்றை இழந்திருந்தது. | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பொதுப் பயன்பாட்டு சேவையின் கீழ் 105(அ) இன் படி மேற்கூறிய நீர் பவுசர் வழங்கள் மேற்கொள்ளப்பட்டது என. | உரிய முறையில் கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | சபையின் எல்லைப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 27 அறிவித்தல் பலகைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 783,200 இற்கான வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேவையான செயற்பாடுகள் எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் நீர் மற்றும் மின்சார பில் பத்திரங்கள் குறிப்பிட்ட காலப் பகுதியினுள் செலுத்தாமையால் நிலுவை மற்றும் தண்டப்பணம் என ரூபா 43,425 தொகை செலுத்துவதற்கு சபைக்கு நேரிட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறு மீண்டும் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நீர், மின்சார பில்பத்திரங்கள் தாமதமின்றி செலுத்தப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ள 08 தொலைதொடர்பு தூண்களுக்காக ஒழுங்குருத்தல் கட்டணம் ரூபா 240,000 தொகை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட கட்டணம் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேசத்தில் அமைந்துள்ள 03 தொலைதொடர்பு தூண்கள் தொடர்பாக அனுமதிப் பத்திரக் கட்டணம் 2019 மற்றும் 2022 ஆண்டுகள் முதல் செலுத்தப்பட்டிருக்காத போதிலும் அது தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 33,000 தொகை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டிற்கான பணம் செலுத்துமாறு அறிவித்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என. | தொழில் மற்றும் திறன்தொழில் அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைக்கு சொந்தமான தகனசாலைக்குரிய நுழைபாதை நிர்மாணிக்கும் போது மண் வெட்டுவதற்குரிய ரேட்டின் கீழ் அளவினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்படாமல் ரூபா 1,270,225 தொகை முறைசாரா விதமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இயந்திர மணித்தியால அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டது என. | அளவினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | தல்கஸ்வலயில் அமைந்துள்ள வர்த்தக கட்டிடத் தொகுதி நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு தயாரிக்கும் போது வேலை விடயம் 5.1 இன் கீழ் கட்டிடத்தின் அத்திவாரம் நிரப்புவதற்காக உரிய ரேட் பயன்படுத்தாமையால் ரூபா 181,472 தொகை ஒன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. அதே போல் உடன்பட்டிருந்த பெறுமதி ரூபா 8,503,932 தொகைக்கான இந்த நிர்மாண வேலை 2021 திசெம்பர் 09 திகதி வேலை பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்ட வேலையின் அளவு ரூபா 2,989,854 தொகையாகக் காணப்பட்டமையால் அதன் நிதி முன்னேற்றம் 35 சதவீத குறைந்த பெறுமதியை கொண்டிருந்தது. | பாதையின் மற்றும் தகனகூட வளவின் மண் அதன் நிர்மாண வேலைகளுக்கு தேவைப்பட்டமையால் அந்த மண் தல்கஸ்வல வர்த்தக கட்டிடத் தொகுதியின் நிர்மாண வேலைக்காக போதியளவாக காணப்படவில்லை என வேலையை பூர்த்தி செய்வதற்காக செயற்திட்டம் மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் மிகவும் சீரற்ற காலநிலைமை ஒன்று காணப்பட்டது என. | குறிப்பிட்ட ரேட் பயன்படுத்தப்பட வேண்டும். எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக குறிப்பிட்ட காலப் பகுதியில் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

## 3.4 ஊழியர் கடன்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சேவையை விட்டு விலகிய மற்றும் ஓய்வுபெற்றுள்ள 15 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 39,847 இற்கான கடன் மீதியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கான இயலுமை தொடர்பாக தொடர்ந்தும் கவனம் செலுத்தப்படும் என. | அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். |